


குறிஞ்சிப்பாடி தொகுதி, வடலூர் நான்குமுனை சாலையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுப்பட்டார். காங்கிரஸ் எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., தி.க.துரை.சந்திரசேகர், சி.பி.ஐ. பி.துரை, வி.சி.க. திருமேனி, ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## சிங்கப்பூர் கவிஞர்

# புதுமைத் தேனீ மா.அன்பழகன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஏப். 23 -

சிங்கப்பூர் கவிஞர் புதுமைத் தேனீ மா.அன்பழகன் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி விடுத்துள்ளார்:

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

சிங்கப்பூர் கவிஞர் புதுமைத்தேனீ மா. அன்பழகன் அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

மா.அன்பழகன் அவர்கள், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் மூன்று முறை உறுப்பினராக இருந்த 'மா.மீ' என்றழைக்கப்படும் நினைவில் வாழும் மா.மீனாட்சி சுந்தரம் அவர்களின் அன்புத் தம்பியும், தற்போதைய வேதாரண்யம் வேட்பாளர் தம்பி புகழேந்தி அவர்களின் சிற்றப்பாவும் ஆவார்.

கழக இலக்கிய அணியின் மாநிலப் பொருளாளராக ஆறு ஆண்டுகள் பணி யாற்றிய அவர், பின்னர் கடந்த 32 ஆண்டு களாக சிங்கப்பூரில் வாழ்ந்து வந்ததோடு, சிங்கப்பூரின் கவிமாலை அமைப்பின் காப்பாளராகவும் செயலாற்றி இலக்கியப் பணிகளைக் கவனித்து வந்தார்.

அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும் சிங்கப்பூர் இலக்கியக் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## மதவெறி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

# சமத்துவ ஆன்மிக ஆட்சி தொடர தி.மு.க.கூட்டணியை ஆதரிப்போம்!

## தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்கள் சங்கம் அறிக்கை!

சென்தனை, ஏப்.23-

தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்கள் சங்கம் மற்றும் அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாண வர்கள் சங்கத்தின் மாநில தலைவர் வா.ரங்கநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்து ஆன்மிக நம்பிக் கையை மூலதனமாக்கி, அதிகா ரத்தை பிடித்த பாஜ இந்நாட்டின் பெரும்பான்மையான இந்து மக்களின் வாழ்வாதாரத்தை அழித்தது. ஆனால், மக்களுக்கு சமத்துவ உணர்வு, சுயமரியாதை உணர்வை ஊட்டி, மக்கள் வாழ்வில் மட்டுமில்லாமல் தெய்வத்திருக்கோயில்களிலும் சமத்துவத்தையும் சமூக நீதியையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிலைநாட்டியுள்ளார்.

திராவிடத் தமிழர் தன்மான ஆட்சியின் மிக முக்கியமான சமூக நீதித் திட்டம் ஆலயங்களில் அனைவரும் சமம் என் பதை நடைமுறைப்படுத்தியது. இதற்கான சட்டத்தை 1972ல் கலைஞர் கொண்டுவந்தார். அப்போது சில வஞ்சக கூட்டத் தினர், நீதிமன்ற படியேறி சதி செய்து அனைத்து சாதி அர்ச்சகர் நியமனத்தை தடுத்தனர். 2006-09 ஆண்டுகளில் பயிற்சி பெற்ற அர்ச்சக மாணவர்கள் தாயற்ற பிள்ளைகள் போல நின்றபோது, தாயுமானவராக அரவணைத்தவர் கலைஞர். அவரின் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும் கருவறையில் சாதி பேதத்தையும், பாலின பேதத்தையும் ஒழித்து, சமத்துவ ஆன்மிகத்தை கட்டி எழுப்ப போராடி வருகிறார். அவர் பக்கம் நாங்கள் நிற்கின்றோம்.

2021, ஆக.14ல் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தில் பார்ப்பனர்கள் அல்லாத அர்ச்சகர் மாணவர்களை முதல்வர் நியமித்தார். இதுதொடர்பாக உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்திலும் நூற்றுக்கணக்கான வழக்குகளை தொடர்ச்சியாக பாஜ, ஆர்எஸ்எஸ் அமைப்பினர் தொடர்ந்து வழக்கு தொடுத்து வருகின்றனர். இதை தமிழக முதல்வர் தொடர்ந்து எதிர்த்து போராடி வருகிறார். அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுத்தும், அச்சுறுத்தியும், சமூக வலைத்தளங்களில் அவதூறுகளை பரப்புவோர் மீதும் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

தமிழ்நாட்டில் 2007-08ல் 207 மாணவர்கள் பயிற்சி முடித்திருந்தனர். தொடர்ந்து, அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் 2022-23ல் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்தும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு 94 பேர், குறிப்பாக மூன்று மாணவிகள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு ஓராண்டு அர்ச்சகர் படிப்பை, முடித்து சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். தற்போது, 2023-2024ல் தேர்வான 111 மாணவர்கள், 2024-2025ல் 96 மாணவர்கள், 2025-2026ல் 100 மாணவர்கள் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயின்று வருகின்றனர். தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலில் இந்து சமய அறநிலையத்துறை கருசுமக்கும் பெண்கள் கருவறைக்குள் என்ற முழக்கத்தை முன்வைத்து பணி செய்து வருகிறது. வரும் சட்டமன்றத் தேர்தலில் சமத்துவ ஆன்மிக ஆட்சி தொடர திமுக கூட்டணிக்கு அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று எங்கள் சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம். பாசிசத்தை வீழ்த்த, மதவெறி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, பாஜ ஆட்சியை வீழ்த்தும் ஜனநாயக போர்க்களம் காண்பது, நம் ஒவ்வொருவரின் மாபெரும் ஜனநாயகக் கடமை. இப்போர்க் களத்தில் கண்ணனாக நின்று, மு.க.ஸ்டாலின் எல்லோரை யும் வழி நடத்திச் செல்கிறார். இது தமிழகத்திற்கே பெருமை சேர்ப்பதாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## கீழ்பென்னாத்தூர் தொகுதியில்

# அரசின் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தியுள்ளேன்!

## பிரச்சாரக் கூட்டத்தில் வேட்பாளர் கு. பிச்சாண்டி பேச்சு!

கீழ்பென்னாத்தூர், ஏப். 23-

கீழ்பென்னாத்தூர் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றிய மங்கலம் கிராமத்தில் முடித்தார்.

மதியம் 3 மணியளவில் நாயுடுமங்கலம் கூட்ரோட்டில் இருந்து வாகன பேரணியாக தொடங்கிய இந்த பிரச்சாரம், நார்த்தாம் பூண்டி,கோடிகுப்பம், பெரிய கிளாம்பாடி, தேவனாம் பட்டு, கருந்துவம்பாடி, புது மல்லவாடி, துரிஞ்சாபுரம், வடக்கரும்பலூர், மாதலம் பாடி, நூக்காம் பாடி உள்ளிட்ட பகுதிகள் வழியாக சென்று, இறுதியாக துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம் மங்களத்தில் நிறைவு பெற்றது.



இறுதி பிரச்சாரத்தின் போது, வேட்பாளர் கு. பிச்சாண்டி அவர்கள் தாம் கடந்த ஆட்சிக்காலத்தில் செய்த பணிகளை மக்களிடம் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், வருகின்ற தேர்தலில் வெற்றி பெற்றால், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள அனைத்து வாக்குறுதிகளையும் இந்த தொகுதியில் முழுமையாக நிறைவேற்றுவேன் என்றும் முக்கியமாக மகளிர்க்கு பல திட்டங்கள் இருக்கின்றன அதேபோல் மாணவ மாணவியர்களுக்கும் பல திட்டங்கள் இருக்கின்றன கட்டடமைப்பு, பொது சுகாதாரம், கல்வி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, பாலங்கள், நீர்தேக்க தொட்டிகள், பள்ளி கட்டிடங்கள் நியாய விலை கடைகள் தொலை நோக்கு பார்வை கொண்ட திட்டங்கள் இப்படி ஏராளமான பணிகள் செய்துள்ளேன். இனியும் தொடர்ந்து செய்வேன் என கூறினார் என்னை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்

இந்த நிகழ்ச்சியில் திமுக மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா, ஒன்றிய செயலாளர்கள் வி.பி. அண்ணாமலை, ராமஜெயம், ஆரஞ்சி ஆறுமுகம், சி. மாரிமுத்து, இரா. ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர்கள் சி.கே. அன்பு, பா. முருகையன், ஒருங்கிணைப்பாளர்கள் பொன். கருணாநிதி, எம். அப்பாசாமி, சி. தேவேந்திரன், மா. குப்புசாமி, கா. சம்பத், கோ. கண்ணன், பகுதி செயலாளர்கள், பணிக்குழு பொறுப்பாளர்கள், கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, விவசாய அணி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காத்திடுவீர் திராவிட தமிழ்மண்ணை!

பூக்காட்டில் சாக்காட்டுக்கு அனுப்பும் பூநாகம் ஒளிந்திருப்பது போல... புனிதம் அண்ணா பெயரில் எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சிக்குள் பூநாகங்கள் நுழைந்து நந்தவனத்தை நச்சரவ வனமாக்கியிருப்பதை... பொதுமக்கள் அறியாதிருப்பது துரதிருஷ்டம்!

அந்த மக்கள் பார்வையில் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும்... அண்ணா உருவம் தாங்கிய கொடியும்... இரட்டை இலையும் தெரிகிறதே தவிர... முன்பிருந்த தூய்மையான நந்தவனம் நச்சரவ வனமாக ஆகியிருப்பதை அறிந்திலர்..! பொய்யர்கள்... புளுகு மூட்டைகள்...

ஊழல்வாதிகள்...

நிறைந்த தலைமைகள்... தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்பதற்காக டெல்லியின் முரட்டு அடிமைகளாக மாற... கட்சியையும் அதன் தூய தொண்டர்களையும் அடமானம் வைத்துவிட்டனர். இத்தகைய தீயசக்திகள் மூலம் சங்கிகள் தமிழ்நாட்டை கைப்பற்றிவிட முயற்சிக்கிறார்கள்.

அதனை முறியடிக்கவே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் போராடுகிறார். இது பெரியார் மண்... அண்ணா உருவாக்கிய பகுத்தறிவு மண்! கலைஞர் உழைத்து வளர்த்த திராவிட மண்! அதனை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த முயல்கிறது மதவாத ஒன்றிய அரசு.

தமிழர்களே..! உணர்வீர்... ஒன்று படுவீர்... வரலாற்றுப் பிழை நடந்து விடாமல் காத்திடுவீர் திராவிட... தமிழ்மண்ணை. ஓட்டளிப்பீர் உதய சூரியனுக்கு!



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

## திருவொற்றியூரில் வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்.23-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆதரவு பெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் எல்.சுந்தர்ராஜ் அவர்களை ஆதரித்து சுத்தியல் அரிவாள் நட்சத்திர சின்னத்தில் வாக்களிக்க வேண்டி திருவொற்றியூர் எட்டாவது வார்டில் தலைமை பொது குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமையில் வட்ட கழக செயலாளர் டி .சி. வி. மணிகண்டன் முன்னிலையில் பெரியார் நகர் முதல் திருவொற்றியூர் மார்க்கெட் வரை டி.எச்.ரோடு இரு மருங்கிலும் வேட்பாளருக்கு ஆதரவாக பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

உடன் மாவட்ட கழகப் பிரதிநிதிகள் சு. சந்தானம் Ex. எம் .சி.,டி. டி.எம். பாபு, ஒய் .நந்திவர்மன், ஜே.பி. சந்தானகிருஷ்ணன்,அ. அருளானந்தம், சுகந்தா முனுசாமி, எம்.எஸ். பாண்டி யன்,கிழக்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் இரா.மு. மணிகண்டன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

# அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு!

## சங்கத் தலைவர் யூ. பிரேமன் முதல்வருக்கு கடிதம்!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பின் அகில இந்திய தலைவர் யூ.பிரேமன் அவர்கள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "தங்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் நிபந்தனையற்ற முழு ஆதரவு அளிக்கிறோம்" என உறுதி அளித்துள்ளார்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சபா. இராஜேந்திரன் முத்தாண்டிக்குப்பம் கடைவீதியில் இறுதி கட்ட தேர்தல் பிரச்சார பரப்புரையில் ஈடுபட்டார். காங்கிரஸ் எம்.எல்.ஏ., எம்.ஆர் .இராதா கிருஷ்ணன், வி.சி.க. மாவட்ட செயலாளர் மருத முத்து, தே.மு.தி.க, ம.தி.மு.க, செந்தில்குமார், சி.பி.எம்., சி.பி.ஐ. உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் ஆர். காந்தி அவர்களை ஆதரித்து மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி அம்மூர் பேரூரில் மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.